بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 18/12/2020 அன்று இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அலீ பின் அபீதாலிப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய நற்குறிப்பு சென்றுகொண்டிருந்தது. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இறுதி நோயின் போது செய்த சேவைகள் குறித்து இவ்வாறு குறிப்புகள் கிடைக்கின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நோய் அதிகமான போது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய வீட்டில் இருந்து பள்ளிவாசல் செல்வதற்கு இருவரின் துணையுடன் செல்வார்கள். அன்னாரது பாதங்கள் பூமியில் கோடிட்டவாறு வந்தன. அதாவது பலவீனத்தின் காரணமாக அன்னாரால் நடக்க முடியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒத்தாசை பெற்ற இருவர் யார் என்றால், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலீ (ரலி) ஆகியோர் ஆவார்கள்.

ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் ஃபஸல் (ரலி), ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோர் குளிப்பாட்டினார்கள். மேலும் இவர்களே அன்னாரை கபரில் இறக்கினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தது பற்றி பல்வேறு அறிவிப்புகளில் எழுதப்பட்டுள்ளது. சில அறிவிப்புகளில், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் முழுமையான விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் உடனடியாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள் என்று வருகிறது. சிலர் இதற்கு முரண்பட்டு எழுதியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரி (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. முஹாஜிர்களும் அன்சாரும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) சொற்பொழிவு மேடையில் ஏறினார்கள். மக்களைப் பார்த்தார்கள்; அவர்களுள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைக் காணவில்லை. அன்சாரில் சிலர் சென்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்து வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பார்த்து, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய தந்தையின் சகோதரர் மகனே! மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது மருமகனே! நீர் முஸ்லிம்களின் சக்தியை உடைக்க விரும்புகிறீரா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய கலீஃபாவே! என்னை பிடிக்க வேண்டாம் என்றவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஆரம்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்வதில் பின்தங்கி விட்டார்கள். ஆனால் வீட்டுக்கு சென்றவுடன் என்ன தோன்றியதோ தெரியவில்லை! (அதை இறைவனே நன்கறிவான்) தலைப்பாகை கூட அணியவில்லை; தொப்பி அணிந்தவாறு

பைஅத் செய்வதற்கு உடனடியாக வந்து விட்டார்கள். அதன் பிறகே தலைப்பாகையை வரவழைத்தார்கள். அவர்களுடைய உள்ளத்தில் இது பெரும் பாவமாயிற்றே என்ற எண்ணம் தோன்றி இருக்கலாம். ஆகவேதான் எந்த அளவு விரைவாக வந்தார்கள் என்றால், தலைப்பாகை கூட அணியவில்லை. அதாவது உடைகளைக் கூட முழுமையாக அணியாமல் வெகுவிரைவாக வந்து விட்டார்கள்.

அந்நேரத்தில் **ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கலீஃபாவாக ஆகியிருக்கக் கூடாது; மாறாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள்தான் கலீஃபாவாக ஆகியிருக்க வேண்டும் என ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது ஆட்சேபனை செய்பவர்களின் கூற்றை குறித்து விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

சித்தீக்கே அக்பர் (ரலி) அவர்கள் உலகம் மற்றும் அதன் ஆடம்பரத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடியவர்களுள் ஒருவராக இருந்தார் என்றும் பிறர் உரிமையை பறிப்பவர் என்றும் ஒருவேளை கருதிக் கொண்டாலும் கூட, நாம் அந்நிலையில் ஒரு நிர்பந்தத்திற்கு ஆளாவோம். அதாவது, அல்லாஹ்வின் சிங்கம் ஆகிய ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் கூட நயவஞ்சகர்களில் ஒருவராவார் என்று ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும். நஊதுபில்லாஹ்!

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைக் குறித்து நாம், அவர்கள் உலகை விட்டு விட்டு அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தார்கள் என்று கருதுவது போன்று அல்லாமல்; மாறாக, அவர்கள் உலகம் மற்றும் உள்ளத்தை ஈர்க்கக் கூடிய அதன் விஷயங்களில் விழுபவராக இருந்தார்கள். மேலும் அதன் அழகில் மூழ்கியவராக இருந்தார்கள். இதன் காரணமாகத்தான் அன்னார் காஃபிர் மற்றும் முர்ததுகளை விட்டு விலகாமல் இருந்தார்கள். மேலும் நயவஞ்சகத்தை மேற்கொள்பவர்களைப் போன்று அவர்களுடன் இருந்தார்கள். ஏறக்குறைய முப்பது வருட காலம் வரை உண்மையை மறைத்து வைத்தார்கள் என்று கருத வேண்டியது வரும். நஊதுபில்லாஹ்!

சித்தீக்கே அக்பர் அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் பார்வையில் உரிமையை பறிப்பவர் என்றால், பிறகு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், அவர்களிடத்தில் பைஅத் செய்ய எவ்வாறு ஆமோதித்தார்? அநீதி, குழப்பம், கிளர்ச்சிகள் நடந்த பூமியிலிருந்து வேறொரு நாட்டிற்கு ஏன் இடம் பெயராமல் இருந்தார்? ஹிஜ்ரத் செய்யும் வகையில் அல்லாஹ்வுடைய பூமி விரிவானது இல்லையா? அதிலிருந்து அவர் இடம்பெயர்ந்து இருக்கலாமே! அதுதானே இறையச்சமுள்ளவர்களின் நடைமுறை. விசுவாசமுள்ள இப்ராஹீம் (அலை) அவர்களின் பற்றுறுதிமிக்க நடைமுறையை பாருங்கள். அவர்கள் உண்மைக்கு சாட்சி பகர்வதில் எவ்வளவு உறுதியாக இருந்தார்கள்!...... அவர்கள் நெருப்பில் வீசப்பட்டார்கள். விஷமிகளின் அச்சத்தின் காரணமாக உண்மையை மறைப்பதை ஒப்புக்கொள்ளவில்லை. இதுவே நல்ல மக்களின் வாழ்க்கை. அவர்கள் வாள் மற்றும் அம்பின் கூர்மைக்கு பயப்படுவதில்லை. பிறருக்கு அஞ்சி உண்மையை மறைப்பதை பெரும் பாவமாகவும் வெட்கமற்ற செயலாகவும் கருதுகின்றனர். சித்தீக் மற்றும் ஃபாரூக் இருவரும் காஃபிர் மற்றும் உரிமையை பறிப்பவர் ஆவர் என ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு இவை அனைத்தும் தெரிந்திருந்தும் அவர் அவ்விருவரிடத்திலும் பைஅத் செய்ததைக் கண்டு நாம் மிக்க வியப்படைகிறோம்........... மேலும் முழுமையான கலப்பற்ற தன்மையுடனும் பற்றுடனும் அவர்கள் இருவரையும் பின்பற்றினார்கள். அவர்கள் அதில் ஒருபோதும் பலவீனத்தைக் காட்டவும் இல்லை; ஒரு போதும் வெறுப்பை வெளிப்படுத்தியதுமில்லை.

**ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தமது முந்தைய கலீஃபாக்களுக்கு ஒருபோதும் எதிர்ப்பு காட்டியதில்லை என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்விஷயத்தை தெளிவாக்கி விட்டார்கள். இன்னும் சொல்வதாயின், அவர்களிடம் பைஅத் செய்து இருந்தார்கள். அதுவன்றி ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பற்றி நீங்கள் கூறுகின்ற படி அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடத்தில் பையத் செய்யவில்லை என்ற கூற்று**

**ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் அந்தஸ்தை கீழே விழச் செய்கிறதே தவிர அதிகரிப்பதில்லை.**

*ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு முன் இருந்த மூன்று கலீஃபாக்களின் கால கட்டத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் செய்த தொண்டுகள் குறித்து எடுத்துரைத்தவாறு ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:*

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள்** உசாமா (ரலி) அவர்களின் தலைமையில் படையை அனுப்பினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே மக்கள் எஞ்சி இருந்தனர். நிறைய காட்டரபிகள் மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க திட்டம் தீட்டினர். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் மதீனாவுக்குள் நுழையும் பல்வேறு வழிகளில் மதீனாவின் சுற்றுப்புறங்களில் காவலுக்கு ஆட்களை நியமித்தார்கள். அம்மக்கள் தமது படையுடன் காவல் காத்தவாறு இரவை கழித்தனர். இந்த காவலாளிகளை கண்காணிப்பவர்களில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள்.

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் காலத்தில்** சில பயணங்கள் செய்ய நிகழ்ந்த நேரத்தில் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை தமது இடத்தில் மதீனாவின் அமீராக நியமித்தார்கள். தபரி வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளதாவது, ஜிஸ்ர் சம்பவத்தில் ஈரானிய படைகளுக்கெதிராக போரிட்ட போது முஸ்லிம்களுக்கு ஒருவகையான நஷ்டம் ஏற்பட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களிடம் ஆலோசனை செய்த பிறகு, தாம் இஸ்லாமிய படையுடன் ஈரானிய எல்லைக்கு செல்வதாக முடிவெடுத்தார்கள். ஆகவே அன்னார் தமக்குப் பின்னால் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை மதீனாவின் கவர்னராக நியமித்தார்கள்.

**ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலத்தில்** குழப்பம் ஏற்பட்டது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவற்றைத் தடுக்க ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு களங்கமற்ற ஆலோசனைகளை தந்தார்கள். எகிப்தியர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வீட்டை சூழ்ந்து கொண்ட போது, எவ்வளவு கடுமையை மேற்கொண்டார்கள் எனில் உணவும் தண்ணீரும் கூட கிடைக்காமல் செய்தனர். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு இவ்விஷயம் தெரிய வந்தபோது தண்ணீர் நிறைந்த மூன்று பானைகளை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய வீட்டிற்கு அனுப்பினார்கள். ஆனால் கிளர்ச்சியாளர்களின் தடையால் அந்த பானைகள் அன்னாருடைய வீட்டிற்கு போய் சேரவில்லை. அந்த பானைகளை எடுத்துச் செல்லும் முயற்சியில் பனூ ஹாஷிம் மற்றும் பனூ உமய்யாவுடைய பல அடிமைகள் காயமுற்றனர். இறுதியில் தண்ணீர் அன்னாருடைய வீட்டிற்கு சென்றடைந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை கொலை செய்ய திட்டம் தீட்டப் படுவது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு தெரிய வந்தபோது, இமாம் ஹஸன் இமாம் ஹுஸைன் ஆகிய தனது இரு மகன்களிடம், நீங்கள் உங்கள் வாளை எடுத்துக் கொண்டு செல்லுங்கள்; ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய வீட்டிற்கு முன் நில்லுங்கள். எந்தவொரு கிளர்ச்சியாளனும் அன்னாரை அடைந்து விடக்கூடாது. எச்சரிக்கை! என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய ஷஹாதத்திற்குப் பிறகுள்ள சம்பவங்களைப் பற்றி எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:** (அந்த நயவஞ்சகர்கள்) ஓரிரு நாட்கள் கொள்ளையடிப்பதில் மும்முரமாக இருந்தார்கள். ஆனால் அந்த உத்வேகம் அடங்கியதும் கிளர்ச்சியாளர்களுக்கு தமது முடிவு என்ன ஆகும் என்ற கவலை ஏற்பட்டது. என்ன ஆகுமோ என்ற பயம் ஏற்பட்டது. அவர்களுள் சிலர் சிரியாவை நோக்கி சென்றனர். அங்கு சென்று, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஷஹீதாகி விட்டார்கள். இதற்குப் பழி வாங்க ஆளில்லையே என அவர்களாகவே புலம்ப ஆரம்பித்தனர். சிலர் மக்காவின் வழியில் சென்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) ஆகியோரைச் சந்தித்து, இஸ்லாத்தின் கலீஃபாவை கொன்றது எவ்வளவு பெரிய அநீதி! முஸ்லிம்களோ அமைதியாக இருக்கிறார்கள் என்று புலம்பினர். சிலர் ஹஸ்ரத்

அலீ (ரலி) அவர்களிடம் விரைந்து சென்று, தற்போது தொல்லை மிக்க காலம்; இஸ்லாமிய ஆட்சி அழிந்து போகும் ஆபத்து உள்ளது. நீங்கள் பைஅத் வாங்குங்கள்; மக்களின் பயம் அகலட்டும். அமைதியும் சமாதானமும் ஏற்படட்டும் என்று புலம்பினர். மதீனாவில் இருந்த சஹாபாக்களும் தற்செயலாக அதே யோசனையைத் தான் கூறினர். அதாவது, இப்போது பொருத்தமான விஷயம் இந்த சுமையை நீங்கள் உங்கள் தலையில் எடுப்பதுதான். இதனால் இந்தப் பணி உங்களுக்கு நற்கூலி மற்றும் இறை விருப்பத்தை பெற காரணமாக அமையும் என்று கூறினர். நாலாபுறமும் அன்னாரை வலியுறுத்தினர். பலமுறை மறுத்த பிறகு, நிர்பந்தத்திற்குள்ளாகி அன்னார் அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டு பைஅத் வாங்கினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய இந்தப் பணி மிகவும் ஞானத்துடன் கூடிய பணியாகும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அன்னார் அப்போது பைஅத் பெற்றிருக்காவிட்டால் இஸ்லாத்துக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டு இருக்கும். அன்னாருக்கும் முஆவியாவுக்கும் இடையில் நடந்த சண்டையில் ஏற்பட்ட நஷ்டத்தை விட பெரிய நஷ்டம் ஏற்பட்டு இருக்கும்.

இன்று நான் மீண்டும் அல்ஜஸாயிருடைய அஹ்மதிகளுக்காகவும் பாகிஸ்தானுடைய அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யும்படி கவனமூட்ட விரும்புகிறேன். அல்லாஹ் அவர்களை பாதுகாப்பில் வைப்பானாக! அல்ஜஸாயிரிலும் சூழ்நிலை அவர்களின் மீது கடுமையாக்கப்படுகிறது. அங்குள்ள ஒரு அரசு வக்கீல் மீண்டும் மீண்டும் நமது அஹ்மதிகள் மீது வழக்கு தொடுக்கிறார். பாகிஸ்தானிலும் இவ்வாறு சிக்கலில் மாட்ட வைக்கப்படுகின்றனர். பிரச்சனைகள் உருவாக்குபவர்கள் மற்றும் ஏதாவதொரு வகையில் எதிர்ப்பவர்கள் ஆகிய இவர்கள் அனைவரையும் அல்லாஹ் படிப்பினைக்குரிய அடையாளமாக ஆக்குவானாக! கடுமையான நிலையை அனுபவிக்கின்ற அஹ்மதிகளுக்கு அல்லாஹ் விரைவில் சூழ்நிலையை சரி செய்வானாக! அவர்களுக்கு எளிதையும், வசதிகளையும் உருவாக்குவானாக! பிறகு நான் இதனையும் கூறுவேன். குறிப்பாக பாகிஸ்தானிய அஹ்மதிகளுக்கு கூறுகிறேன். எந்த அளவுக்கு துஆக்களின் பக்கம் கவனம் இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு கவனம் இல்லாமல் உள்ளது. ஆகவே முன்னரை விட பெருமளவு அதிகம் துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் விரைவில் நம்மை இந்த கஷ்டங்களிலிருந்து வெளியேற்றுவானாக! எளிமையை உருவாக்குவானாக! உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தியை சுதந்திரமாக பாகிஸ்தானிலும், உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் பரவச் செய்பவர்களாக நாம் இருப்போமாக!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் ரப்வாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் தாஹிர் அஹ்மத் சாஹிப், மதிப்பிற்குரிய ஹபீபுல்லாஹ் மஸ்ஹர் சாஹிப், மதிப்பிற்குரிய பஷீருத்தீன் அஹ்மத் சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய அமீனா அஹ்மத் சாஹிபா ஆகியோர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்)